DiNAMALAR
National Tamil Daily



# சிங்கப்பூரில் “ வாசிக்கலாம் வாங்க “ நிகழ்ச்சி

பதிவு செய்த நாள்: நவ 29,2018 06:28

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர்க் கிளையும் தேசிய நூலக வாரியமும் இணைந்து நடத்திய “ வாசிக்கலாம் வாங்க “ எனும் சிறப்பு நிகழ்வு விக்டோரியா சாலையிலுள்ள நூலக வளாக அரங்கில் நவம்பர் 24 ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. குடும்பத்துடன் நூலகத்திற்கு சென்று தமிழ் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிங்கப்பூர் கல்வி அமைச்சின் தாய் மொழிப் பிரிவுத் துணை இயக்குநர் சாந்தி செல்லப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேசிய நூலகத் தமிழ் மொழிச் சேவைப் பிரிவின் தலைவர் அழகிய பாண்டியன் உரையாற்றுகையில் நூலகத்தில் கிடைக்கும் வளங்களையும் வசதிகளையும் விவரித்தார். சிங்கப்பூர் தேசியக் கல்விக் கழகப் பேராசிரியர் அனிதா தேவி பிள்ளை மற்றும் முனைவர் சியா டி யோங் அலெக்ஸியஸ் ஆகியோர் வாசிப்பின் இன்றியமையாத் தன்மை பற்றி எடுத்துரைத்தனர். வினா – விடை அரங்கம் சுவை கூட்டியது. சங்கச் செயற்குழு உறுப்பினரும் பத்திரிகையாளருமான ஷாநவாஸ் நிகழ்வை நெறிப்படுத்தினார். நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தகுந்ததாகும்.

**- நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்**

